**செய்தி வெளியீடு எண்: 140** **நாள்: 23.02.2018**

**<u>Jain International Trade Organisation சார்பில் இன்று (23.2.2018) நடைபெற்ற JITO CONNECT 2018 நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை</u>**

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.**

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்**
**திரு பன்வாரிலால் புரோஹித் அவர்கள**ே!

மற்றும் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ள வந்திருக்கும் முக்கிய விருந்தினர்களே!
JITO அமைப்பின் நிர்வாகிகளே!
உங்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

JITO அமைப்பின் சார்பில் நடத்தப்படும்
JITO CONNECT 2018 நிகழ்ச்சியில்
பங்கு கொள்வதில் நான்
மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

‘‘அறிவுடையோர் அன்புடையோராய் இருப்பர்
உலகம் நலம்பெற உழைப்பவர்கள் ஞானிகள்
என்றும் அழியாதது அறம் ஒன்றுதான்’’

இத்தகைய உயரிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தவர்தான் பகவான் மகாவீரர்.

சமண சமயத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்
அரச குடும்பத்தில் பிறந்த **‘வர்த்தமானர்’**
என்ற இயற்பெயரைக் கொண்ட ‘**மகாவீரர்**’.

இவருடைய கருத்துக்களை ‘**ஜைனம்**’ எனவும்,
கருத்தினை ஏற்றுக் கொண்டவர்கள் ‘**ஜெயனர்**’
என்றும் அழைக்கப் பெற்றனர். இச் சொல்லே
நாளடைவில் ‘**ஜைனர்**’ என்றானது.
இவர் மாமனிதர், ஞானபுத்திரர், அதி வீரர்
எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார்.

'**மகாவீரர்**' மூன்று ரத்தினங்கள் என்று அழைக்கப்படும்
'**நன்னம்பிக்கை, நல்லறிவு, நற்செயல்**' என்ற
போதனையை போதித்தவர். இவருடைய
போதனைகளும், தத்துவங்களும் இன்றும் உலகம்
முழுவதும் அனைத்து தரப்பு மக்களாலும்
ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

'**மகாவீரர்**' கி.மு 599–ம் வருடம் இந்தியாவின்
பீகார் மாநிலம் வைசாலி எனும் இடத்திற்கு அருகில்
உள்ள '**குந்தி கிராமா**' என்ற ஊரில்
சித்தார்த்தர் – திரிசலை ஆகியோருக்கு
மகனாக பிறந்தவர்.

இவர் யசோதா எனும் பெண்ணை மணந்து
இல்லறம் நடத்திக் கொண்டிருந்தபோது
யாகம், சாதிக் கொடுமை போன்றவற்றைக்
கண்டு மனம் வெறுத்து துறவறம் பூண்டார்.

மனித வாழ்க்கையின் அர்த்தம் தேடி
சுமார் பனிரெண்டு ஆண்டுகள் தியானம்
மற்றும் ஆன்மீகத் தேடலில் ஈடுபட்ட
மகாவீரர் அவர்கள் '**சாலா**' என்னும் மரத்தடியில்
ஞானம் பெற்றார்.

இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களில்
கடைசி தீர்த்தங்கரர் என சமணர்களால் போற்றப்படும்
மகாவீரரின் போதனைகள் அன்பையும்,
மனிதநேயத்தையும், அகிம்சையையும் போதிக்கும்
உன்னத கோட்பாடுகளாக விளங்குகிறது.

மேலும் எந்த உயிரினத்திற்கும் தீங்கு இழைக்காமல்
இருத்தல், உண்மையை மட்டும் பேசுதல்,
திருடாமை, துறவு வாழ்க்கையை மேற்கொள்ளுதல்,
பணம் பொருள் சொத்துக்கள் மீது
ஆசைச் கொள்ளாமல் இருத்தல் என
ஐந்து பண்புகளை ஜைன மதத்தின்
உறுதி மொழிகளாக விளங்குகின்றன.
குறிப்பாக அகிம்சையை தன்னுடைய கொள்கையாக
போதித்த மாபெரும் சீர்திருத்தவாதியாக
மகாவீரர் போற்றப்படுகின்றார்.
வட இந்தியாவில் இருந்த ஜைன மதம்

தமிழ்நாட்டிற்கு கி.மு **3** ஆம் நூற்றாண்டில்
சந்திரகுப்த மௌரியரின் அரச குருவாக இருந்த
பத்திரபாகு முனிவர் என்பவர் காலத்திலேயே வந்தது.

இவர் தன்னுடைய சீடரான விசாக முனிவரை
அனுப்பி சோழ, பாண்டிய நாடுகளில் ஜைனம்
பரவ வழிவகை செய்தார்.

மனிதர்கள் அனைவரையும் சமமாக நோக்கும்
பண்பை சமணர்கள் வளர்த்தனர்.
உயர்வு தாழ்வு இல்லை என்பது அவர்களின் கருத்து.

துன்பப்படுபவர்களுக்கு உணவு, அடைக்கலம்,
மருந்து, கல்வி ஆகிய நான்கு தானங்களை
செய்வதையே பெரிய அறமாக சமணர்கள் கருதினர்.

மேலும், அவர்கள் தங்கள் கொள்கை பிரச்சாரத்தை அந்தந்த பகுதி தாய் மொழிகளிலேயே செய்தனர்.

மாணாக்கன். மாணாக்கி என்ற சொற்களும்
சமணக் கல்வெட்டுகளில் இருந்து பெறப்பட்டவையே.
சமண ஆண் துறவிகள் மட்டும் இல்லாமல்,
பெண் துறவிகளும் கல்வி போதித்து வந்தனர்.
பெண்கல்வி வளர்ச்சிக்குச் சமணம்
ஊக்கம் அளித்துள்ளது.

தேனினும் இனியது நம் தமிழ் மொழி.
அம்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டோர் பலர்.
அவர்களுள் சமணர்கள் தனித்துவம் மிக்கவர்கள்.
ஆம் தமிழின் இனிமையைத்
தனியாய் உணர்ந்தவர்கள் சமணர்கள்.

'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'
என்ற பழமொழி நாலடியாரையும்,
திருக்குறளையும் குறிக்கும்.

இதில் திருக்குறளுக்கு இணையாக பேசப்படும்
நாலடியார் சமணர்களால் இயற்றப்பட்ட நூலாகும்.

தற்காலத்தில் கூட தமிழ்நாட்டில் வாழும் ஜைனர்கள்
பள்ளிகள், கல்லூரிகள் என எண்ணற்ற

கல்வி நிறுவனங்களை அமைத்து தமிழ்நாட்டின்
கல்வி வளர்ச்சிப் பணிகளில் தங்களை
ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார்கள்.
இதைத் தவிர, மருந்தகங்கள் மூலம் மருத்துவம்,
ஏழை எளியவர்களுக்கு உணவு வழங்குதல் போன்ற
சமுதாய பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக்
கொண்டு வருவது பாராட்டத்தக்கது.

தமிழ்நாட்டிலுள்ள 17 ஜெயின் ஆலயங்களை
இந்துசமய அறநிலையத்துறை நன்கு பராமரித்து
வருகின்றது.

ஜெயின் சமூகத்தில் பெரும்பாலானோர்
இந்தியா மட்டுமல்லாமல், உலகளவில்
பல்வேறு தொழில் நிறுவனங்களை வெற்றிகரமாக
நடத்தி வருகின்றனர். தமிழ்நாட்டில்
பெரிய அளவில் தொழில் தொடங்க வேண்டும்
என இம்மாநாட்டிற்கு வந்து இருக்கின்ற
உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

I request all of you
who have assembled here
to make substantial investments
in Tamil Nadu.

This State has many advantages namely,

- Peaceful State. Law and order maintained effectively
- Single Window Portal for clearing Projects.
- Business Facilitation Act to provide time bound clearances and renewals, as well as grievances redressal mechanism for projects.
- One of the top three recipients of Foreign Direct Investment.
- Uninterrupted Power supply and infrastructure facilities.
- Transparent decision making Government
- Skilled Human Resources.

- Puratchi Thalaivi Amma had organised the first ever Global Investors Meet in September, 2015, at Chennai, in which more

than 8000 industrialists had participated and investments worth 2.42 Lakhs Crore rupees were made. Investments worth 62,738 crore rupees have been materialised.

- This Government has proposed to organise the Second Global Investors Meet on January 23rd and 24th 2019.

I request all of you to participate in it.

I congratulate the organisers for having organised this wonderful conference, which would benefit Tamil Nadu and India.

நன்றி!

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**